# காசநோய் விளக்கம்

**Dr. சி. யமுனானந்தா**
**MBBS, DTCD**

# காசநோய் என்றால் என்ன?

- காசநோய் மைக்கோபக்றீரியம் கியூபக்குளேபசிஸ் எனப்படும் ஒருவகை பற்றீரியாவினால் ஏற்படுகின்றது.
- இது காற்றினால் பரவக்கூடிய தொற்றுநோய்.
- உலகில் 1/3 பகுதியினர் காசநோய்த் தொற்றலுக்கு உள்ளாகியுள்ளனர்.
- காசநோய்த் தொற்றுக்கு உள்ளாகிய அனைவருக்கும் காசநோய் ஏற்படுவதே இல்லை.
- ஒருவரின் உடல் எதிர்ப்புச்சக்தியை இழக்கும்போதே அவருக்குக் காசநோய் ஏற்படும்

**காசநோய் பரம்பரை நோயல்ல**

# காசநோய் எவ்வாறு உருவாகின்றது?

- ❖ ஒருவரின் உடலில் காசநோய்க்கிருமிகள் செல்லும்போது குருதியில் உள்ள தின்குழியங்கள், நிணநீர்க்குழியங்கள் என்பவற்றின் செயற்பாட்டினால் சிறைப்பிடிக்கப்பட்டு செயலற்ற நிலைக்கு மாற்றப்படும்.
- ❖ ஒருவரின் உடலில் நோய் எதிர்ப்புச்சக்தி குறையும்போது சிறைப்பிடிக்கப்பட்ட கிருமிகள் சிறையினின்று விடுபட்டு நோயினை ஏற்படுத்துகின்றன.
- ❖ காசநோய் பொதுவாக நுரையீரலைத் தாக்குகின்றது.
- ❖ பின்னர் குருதி மூலம் உடலின் ஏனைய பகுதிகளைச் சென்றடைகின்றது.

அவையாவன: மூளை மென்சவ்வு, சிறுநீரகம், பலோப்பியன்குழாய், விதை, என்பு, மூட்டு, நுரையீரல், சுற்றுச்சவ்வு, இருதயம், நிணநீர் மூலம் நிணநீர் முடிச்சினைச் சென்றடையும்

**காசநோயாளிகளில் 80 வீதமானோர் நுரையீரல் காசநோயினால் பாதிக்கப்பட்டவர்களாவர்**

# காசநோய் எவ்வாறு பரவும்?

காசநோயினால் பாதிக்கப்பட்ட ஒருவர்

- இருமம்போது
- தும்மும்போது
- கதைக்கும்போது
- எச்சில் சளியினைத் துப்பும்போது காசநோய்க்கிருமிகள் காற்றினை அடைகின்றன.

காசநோய்க்கிருமிகள் உள்ள காற்றினை ஒருவர் சுவாசிக்கும்போது அது அவரின் நுரையீரலை அடைகின்றது.

**காசநோய் தொற்றுவது என்பது அவர் எவ்வளவு நேரம் நோய்க்கிருமியுள்ள காற்றினைச் சுவாசித்தார் என்பதிலும் நோய்க்கிருமியின் செறிவிலும் தங்கியுள்ளது.**

# காசநோய் யாருக்கு வரும்?

## எவருக்கும் ஏற்படலாம். எனினும் கூடுதலான ஆபத்தை எதிர்பார்க்கக்கூடியவர்கள்.

- காசநோயாளியுடன் நெருங்கிய தொடர்புடையவர்.

  உதாரணம்: குடும்ப உறுப்பினர்.
- காசநோயாளியுடன் ஒன்றாக வசிப்பவர் அல்லது வேலை செய்பவர்.
- போசாக்கு குறைபாடு உடையவர்
- வறுமை காரணமாக நெருங்கி வாழ்பவர்கள், தகுந்த வீட்டு வசதி இல்லாதவர்கள்.
- காற்றோட்டம், சூரியஒளி குறைந்த இடங்களில் வாழ்பவர்கள்.
- புற்றுநோய், எச். ஐ. வீ., சலரோகம் போன்ற நோய் உள்ளவர்கள்.
- மதுபானம், போதைப்பொருள் பாவிப்பவர்கள்.
- புகை பிடிப்பவர்கள்
- சுகாதாரத் தொழிலாளர்களாகப் பணிபுரிபவர்கள்

**காசநோய் எவருக்கும் ஏற்படலாம்**

# காசநோய்க்கான அறிகுறிகள் எவை?

- தொடர்ச்சியான இருமல்

  (3 வாரங்களுக்கு மேலாகக் காணப்படல்)
- மாலை நேரங்களில் மெல்லிய காய்ச்சல்
- சளியுடன் இரத்தம் வெளியேறல்
- நிறை குறைவடைதல்
- உணவில் விருப்பமின்மை
- ஏனைய அறிகுறிகள்
  - ❖ நிணநீர்க் கணுக்கள் வீங்குதல்

    (பொதுவாகக் கழுத்துப் பகுதி)
  - ❖ இருமும்போது வலி ஏற்படல்

**காசநோய் உடலின் வெவ்வேறு பகுதிகளைத் தாக்கும்போது பாதிப்படைந்த பகுதிகளுக்கு ஏற்ப அறிகுறிகள் ஏற்படும்.**

# உங்களுக்கு காசநோய் ஏற்பட்டுள்ளதா என்பதை எவ்வாறு அண்ணளவாக அளவிடலாம்?

**காசநோய் ஏற்பட்டுள்ளது என்பதற்கான பண்பறிசுட்டிகளும் அவற்றின் புள்ளிகளும்**

| இல. | பண்பறிச் சுட்டிகள் | புள்ளிகள் |
|---|---|---|
| 01. | 3 கிழமைக்கு மேல் தொடர்ச்சியான இருமல் | 20 |
| 02. | மாலை நேரக் காய்ச்சல் | 20 |
| 03. | உடல் நிறையிழப்பு | 15 |
| 04. | இருமலுடன் இரத்தம் வெளியேறல் | 10 |
| 05. | உணவில் விருப்பமின்மை | 10 |
| 06. | உறவினர் யாருக்காவது ஒருவருக்கு காசநோய் காணப்பட்டால் | 05 |
| 07. | நண்பர்களுக்கு காசநோய் காணப்பட்டால் | 05 |
| 08. | சுவாசிப்பதில் சிரமம் | 03 |
| 09. | இரவில் வியர்த்தல் | 03 |
| 10. | நெஞ்சில் நோ | 03 |
| 11. | ஊடல் களைப்பு | 03 |
| 12. | சலரோக நோய் காணப்பட்டால் | 03 |
| | **மொத்தம்** | **100** |

பண்பறிச் சுட்டிகளின் மொத்தப் பெறுமதி 50க்கு மேல் காணப்படின் மார்புநோய்ச் சிகிச்சை நிலையத்திற்குக் கட்டாயம் சளிப் பரிசோதனைக்கு வரல் வேண்டும். இவர்களுக்கு காசநோய் ஏற்பட்டுள்ளமைக்கான சாத்தியம் அதிகம். 3 கிழமைகளிற்குமேல் இருமல் இருப்பின் சளிப்பரிசோதனை செய்தல் வேண்டும்.

# காசநோயை எவ்வாறு உறுதிப்படுத்தலாம்?

- சளி மாதிரியினைப் பரிசோதனை செய்தல் (Sputum smear)
  - இதற்கு ஒருவர் நன்கு இருமுவதன்மூலம் சளியைச் சேகரித்துக் கொடுக்க வேண்டும்.
  - எச்சிலைக் கொடுப்பது பயனற்றது.
  - குறைந்தது மூன்று தடவைகளேனும் கொடுக்க வேண்டும்.
  - சளிப்படலம் சாயமூட்டப்பட்டு நுணக்குக் காட்டியூடாக அவதானிக்கப்படும்.
- சளி மாதிரியில் உள்ள கிருமிகளை விசேட வளர்ப்பூகங்களில் வளர்த்து அவதானித்தல்.
- மார்ப்புப் பகுதியைக் கதிர்ப்படம் எடுத்தல் நுரையீரலில் ஏற்பட்டுள்ள பாதிப்பு அவதானிக்கப்படும்.
- தோலில் செய்யப்படும் சோதனை (Mantoux skin test) இதன்போது ரியூபக்குளின் (Tuberculin) எனப்படும் பதார்த்தம் தோலின்கீழ் ஊசிமூலம் செலுத்தப்பட்டு ஏற்படும் மாற்றம் 72 மணித்தியாலங்களின் பின் அளவிடப்படும்.

**காசநோயைக் கண்டறிவதில் சளிப்பரிசோதனை சிறப்பானதும் நம்பிக்கையானதுமாகும்.**

# காசநோய் குணப்படுத்தக்கூடியதா?

**ஆம் தகுந்த முறையில் சிகிச்சை அளிப்பதன்மூலம் காசநோயைக் குணமாக்கலாம்.**

## காசநோய்க்கான சிகிச்சையின் நோக்கம்

- காசநோயாளியைப் பூரண குணமாக்கல்
- காசநோயாளியை இறப்பிலிருந்தும், பின்விளைவுகளிலிருந்தும் தடுத்தல்.
- சமூகத்திற்கு நோய் பரவுதலைத் தடுத்தல்.
- காசநோய் மீளவருதலைத் தடுத்தல்.
- காசநோய்க்கிருமிகள் மருந்துக்கு எதிர்ப்புத்தன்மை பெறுவதைத் தடுத்தல்.

  இவை குறுகிய காலத்திற்கு (பொதுவாக 6 மாதங்களுக்கு) மருந்து கொடுப்பதன்மூலம் அடையப்படுகின்றது.
- இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் உள்ள அரசாங்க வைத்தியசாலைகளிலும், மார்புநோய் சிகிச்சை நிலையங்களிலும் காசநோய்க்கான சிகிச்சை இலவசமாக வழங்கப்படுகின்றது.

**காசநோய் ஒழுங்காக ஆறு மாதங்களிற்கு மருந்துகள் எடுப்பதனால் பூரணமாகக் குணமடையக்கூடியது.**

# காசநோய்க்கான சிகிச்சை முறைகள்

**வகை I சிகிச்சை**

இச்சிகிச்சைமுறை புதிதாகக் காசநோய் இனங்காணப்பட்ட நோயாளிக்கு வழங்கப்படும்.

**ஆரம்ப அவத்தை (Intensive Phase)**

- இக்காலப்பகுதியில் நோய்க்கிருமிகள் விரைவாகக் கொல்லப்படும்.
- நோயாளி ஏறத்தாழ இரண்டு வாரங்களில் தொற்றல் அற்ற நிலைக்கு மாற்றப்படுவதுடன், நோய்க்கான அறிகுறிகளும் குணமடையும்.
- பின்வரும் மருந்துகள் இரண்டு வாரங்களுக்கு வழங்கப்படும்.

றைபம்சின் (Rifampicin)

ஐசொனியாசிட் (Isoniazide)

பைறசினமைட் (Pyrazinamiid)

எதம்பியூட்டோல் (Ethambutol)

தற்போது நான்கு வில்லைகளும் ஒன்றாக இணைக்கப்பட்டு ஒரு வில்லையாக உள்ளது.

## வகை I சிகிச்சையில்

| மருந்து | அளவுநிறை (கிலோகிராம்) | | | காலம் (3 மாதங்கள்) |
|---|---|---|---|---|
| | < 35 | 35. – 50 | >50 | |
| RHEZ | 2 | 3 | 4 | 2 |
| RH | 2 | 3 | 4 | 4 |

## தொடர் அவத்தை (Continuation phase)

- இக்காலப்பகுதியில் உடலில் எஞ்சியுள்ள கிருமிகள் அழிக்கப்படும். நோய்மீள வருவது தடுக்கப்படும்.
- றைபம்பிசின், ஐசொனியாசிட் என்பன நான்கு மாதங்களுக்கு வழங்கப்படும்.
- தற்போது இரண்டு வில்லைகளும் ஒன்றிணைக்கப்பட்டு ஒரு வில்லையாக உள்ளது.

## வகை II

- இச்சிகிச்சைமுறை மீண்டும் காசநோய் ஏற்பட்டவருக்கும், சிகிச்சையை முறையாகப் பெறாதவர்க்கும் வழங்கப்படும்.
- இதன்போது ஆரம்ப அவத்தையின் நான்கு மருந்துகளுடன் ஸ்ரெப்ரோமைசின் (Streptomycin) எனப்படும் ஊசியும் முதல் இரண்டு மாதங்களுக்கு வழங்கப்படும்.

- அடுத்த ஒரு மாதத்திற்கு நான்கு மருந்துகள் வழங்கப்படும். வழங்கப்படும்.
- இறுதி ஐந்து மாதங்களுக்குத் தொடர் அவத்தையின் இரண்டு மருந்துகளுடன் எதம்பியூட்டோல் வழங்கப்படும்.

| மருந்து | அளவுநிறை (கிலோகிராம்) | | | காலம் (மாதங்கள்) |
|---|---|---|---|---|
| | < 35 | 35. – 50 | >50 | |
| RHEZ | 2 | 3 | 4 | 2 |
| Stretomycin | 0.5 | 0.75 | 1g | 2 |
| பின் | | | | |
| RHEZ | 2 | 3 | 4 | 1 |
| பின் | | | | |
| RHE | 2 | 3 | 4 | 5 |

*கர்ப்பிணித் தாய்மாராக இருந்தாலும், பாலூட்டும் தாய்மாராக இருந்தாலும் காசநோய்த்தடுப்பு மருந்தினை நோய் ஏற்படின் எடுக்க வேண்டும். அத்துடன் பாலூட்டும் தாய்மார் குழந்தைகளுக்கு தொடர்ந்து தாய்ப்பாலூட்டல் அவசியம்.*

**காசநோய் பரவாது தடுக்க என்ன செய்ய வேண்டும்?**

- இருமும்போதும், தும்மும்போதும், மூக்கு வாய்ப்பகுதிகளை கைக்குட்டையினால் மூடிக்கொள்ள வேண்டும்.
- கண்ட இடங்களில் துப்புவதைத் தடுத்தல் / தவிர்த்தல்
- நோயாளியின் சளியினைச் சேகரித்துப் புதைத்தல் அல்லது கடதாசியில் சேகரித்து எரித்தல் வேண்டும்.
- நோயாளி ஆரம்பத்திலேயே இனங்காணப்பட்டுச் சிகிச்சை பெறப்பட வேண்டும்.
- காசநோயாளிக்குப் பூரணமாக சிகிச்சை அளித்தல்.
- காசநோயினால் பாதிக்கப்பட்டவரின் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படல்.
- நல்ல காற்றோட்டமும் சூரிய ஒளியும் உள்ள இடங்களில் வாழ்தல், வேலை செய்தல்.
- எமது போசாக்கு நிலையையும், நோயெதிர்ப்புச்சக்தி நிலையையும் நன்கு பேணுதல் வேண்டும்.